1989 ஏப்ரல் 29]

அரசாங்கம் ஃபுட் பிரிட்ஜ்-ஐயாவது, நடைபாதையையாவது ஒன்று அமைத்தால் நல்லது மக்கள் நடந்து இந்தப் பக்கமும், அந்தப் பக்கமும் கடந்து செல்வதற்கான அளவில் ஒரு பாலத்தை அமைத்துத் தருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதைப்பற்றி அரசு பரிசீலிக்கும்.

நெல்லை மாவட்டத்தில் நகரப் பேருந்துகளை தேசியமயமாக்குதல்.

153—(*வினா எண். 365) திரு. ஆச்சியூர் எம். மணி : மாண்புமிகுபோக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) பேருந்துகளைத் தேசியமயமாக்கும் திட்டத்தின்படி நெல்லை மாவட்டத்தில் நகரப் பேருந்துகளை தேசியமயமாக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அப்பணி எப்பொழுது ஆரம்பமாகும் ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவர் அவர்களே,
(அ) இல்லை.
(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. ஆச்சியூர் எம். மணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெல்லை—தூத்துக்குடி, மேலப்பாளையம், சங்கரன் கோயில் நகர்ப்பகுதிகளில் ஓடுகின்ற தனியார் பஸ்கள் அரசு பஸ்களாக மாற்றப்படுமா ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூலக்கேள்வியே அதுதான். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், 'இனிமேலாவது மாற்றப்படுமா ?' என்று கேட்டிருந்தால் அது துணைக் கேள்வியாக இருந்திருக்கும். நம்முடைய அரசைப் பொறுத்தவரையில் தமிழகத்தில் இருக்கக்கூடிய அனைத்துப் பேருந்துகளையும் அரசுடைமையாக்க வேண்டும் என்பதுதான் நம்முடைய கொள்கை. 1973-ஆம் ஆண்டில் இதற்காகத்தான் நாட்டுடைமைச் சட்டம் கொண்டு வரப்பட்டது. அதிலே பல்வேறு தடங்கல்கள் ஏற்பட்டு மேற்கொண்டு நம்முடைய அரசைப் பொறுத்தவரையில் படிப்படியாக மாநிலம் முழுவதும் செயல்படுத்துவோம் என்று ஏற்கெனவே அரசு அறிவித்துள்ளது. அந்த அடிப்படையிலே மாவட்ட வாரியாக இந்த நாட்டுடைமைக் கொள்கை வரும்போது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லியிருக்கக்கூடிய அந்தப் பேருந்துகளை அரசு ஏற்றுக் கொள்ளக்கூடிய எதிர்காலம் வரும்.

திரு. கே. ரமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு முன்னர் நிறைவேற்றியிருந்த சட்டம் தேசிய உடைமையாக்கும்படியான சட்டம். அதை எதிர்த்து எதிர் வழக்குப் போடப் பட்டு சுப்ரீம்கோர்ட் அது செல்லுபடியாகின்ற சட்டம் என்று தீர்ப்பளித்திருக்கிற சூழ்நிலையில் அந்தச் சட்டம் தொடர்பாக கொஞ்சம் விறுவிறுப்பாக நடைமுறைக்குக் கொண்டுவருவதற்கு என்ன ஏற்பாடுகள் இருக்கின்றன? எந்தெந்த லைன் பஸ்களை இந்த ஆண்டு தேசியமயம் ஆக்குவதற்கு அரசு திட்டம் வைத்திருக்கிறது என்பதைப் பற்றி அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 9-20)

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு பேருந்துகளை நாட்டுடைமையாக்க வேண்டுமென்று சொல்லுகின்ற திட்டத்தைப் பொறுத்தவரையில் தற்போது ஏற்கெனவே இருக்கின்ற 12,500 பேருந்துகள் பல்வேறு போக்குவரத்துக் கழகங்களின் மூலமாக இயக்கப்படுகின்றன. ஆனால் அவற்றில் ஏற்பட்டிருக்கின்ற நிர்வாகத்தவறுகள், மோசடிகள் பற்றி ஏற்கெனவே இந்த மன்றத்தில் நிதிநிலை அறிக்கையின் மீதான விவாதத்தின்போதும், பல்வேறு நேரங்களில் கேள்வி நேரத்திலும் சொல்லப்பட்டிருக்கின்றன. அப்படிப்பட்ட குறைபாடுகளை நீக்க ஒரு நிபுணர் குழு அமைக்கப்பட்டு, அவர்களுடைய ஆலோசனையின்பேரில் விரைந்து நடவடிக்கை எடுக்கப் பட்டு, ஏற்கெனவே இருக்கின்ற நிர்வாகக் கோளாறுகள் எல்லாம் தீர்க்கப்பட்டு, அதற்குப் பிறகு படிப்படியாக நாட்டுடைமையாக்குகின்ற கொள்கையை இந்த அரசு செயல்படுத்தும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சென்னைக்கு துரிதப் பேருந்து.

154—(*வினா எண். 789) திருமதி ரமணி நல்லதம்பி : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வடக்கன்குளம் வழியாக கன்னியாகுமரியிலிருந்தும், நாகர்கோவிலிலிருந்தும் சென்னைக்கு துரிதப் பேருந்து விடும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது விடப்படும் ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

சட்டமன்றம் LEGISLATIVE ASSEMBLY TAMIL NADU வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS